## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

# 1992 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, சதகம் மிதுரு சமுலுவ (கூட்டிணைத்தல்) சட்டம்

*[1992, ஏப்றில் மாதம் 21 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

***அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.***

***1992, ஏப்றில் மாதம் 24 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.***

***இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.***

***கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.***

*விலை : சதம் 60* *தபாற் செலவு : ரூபா 1.00*

## 1992 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, சதகம் மிதுரு சமுலுவ (கூட்டிணைத்தல்) சட்டம்

[1992, ஏப்றில் மாதம் 21 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 95/90

### சதகம் மிதுரு சமுலுவவைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்.

பௌத்த ஞான தத்துவ மாபில் அமைக்கப்பட்ட "சதகம் மிதுரு சமுலுவ" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கழகமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட கழகத்தோடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் கொண்டு நடாத்தவும் அத்துடன் அதன் குறிக்கோள்களை பயனுற நிறைவேற்றும் நோக்கத்துக்கென 1958 முதல் கண்டியில் இருப்பதாலும் : முன்னுரை

அத்துடன் சொல்லப்பட்ட கழகமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டு நடாத்தியும் வந்துள்ளதாதலாலும் ; அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1992 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, சதகம் மிதுரு சமுலுவ (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "கழகம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) சதகம் மிதுரு சமுலுவவில் தற்போது உறுப்பினராகவுள்ள அத்தகையோரான அத்தனை ஆட்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினராக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தகைய வேறு ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "சதகம் மிதுரு சமுலுவ" என்னும் பெயரின் கீழும் மகுடத்தின் கீழும் இடையறு வழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாகவிருத்தலும் வருதலும் வேண்டும். அத்துடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாம் என்பதோடு அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் அவர்கள் விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத் தத்துவமும் அதிகாரமும் பெற்றதாயிருத்தலும் வேண்டும். சதகம் மிதுரு சமுலுவவைக் கூட்டிணைத்தல்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாயிருத்தல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :— கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) புத்த பெருமானது அதி உன்னத போதனைகளின் உபவாசக்காரர்களான சீடர்கள் உணர உதவுதல் ;

(ஆ) உபவாசகர்களிடையே சிநேகிதத்தை ஊக்குவித்தல் ;

(இ) ஒரு நேர்மையான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப உதவுதல் ;

(ஈ) கொள்கைப் பிரயோகம், உட்கருத்து உட்பட புத்தபெருமானின் போதனைகளின் முழுமையான அறிவை, மேம்படுத்தல் ;

(உ) ஆத்மீக நிலையங்களுக்கு ஏற்பாடு செய்தலும் அவற்றைப் பேணுதலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் சகல குறிக்கோள்களையேனும் அல்லது அவற்றுள் ஒன்றையேனும் எய்துவதற்கு உசிதமானவையான அல்லது அவற்றின் இடைநேர் விளைவான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் கருமங்களையும் செய்தல்.

*நிறைவேற்றுக் குழு.*

4. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இருத்தல் வேண்டுமென்பதுடன் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைய பின்வருவோரைக் கொண்ட ஒரு நிர்வாகக் குழுவினால் நிருவகிக்கப்படல்வேண்டும் :—

(அ) தலைவர் ;

(ஆ) உப தலைவர், ஒரு செயலாளர், ஒரு பொருளாளர், கூட்டுத்தாபன விதிகளுக்கு இணங்கத் தெரிவு செய்யப்பட வேண்டிய ஒரு அமைப்பாளரும்; அத்துடன்

(இ) அத்தகைய விதிகளில் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறானவர்களும் அதற்கிணங்கத் தெரிவு செய்யப்பட்டவர்களுமான அத்தகைய எண்ணிக்கையினரான ஆட்கள்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுக்குழு இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர் முந்திய நாளன்று பதவி வகிக்கும் கழகத்தின் நிறைவேற்றுக்குழுவின் உறுப்பினர்களாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

5. (1) ஒரு பொதுக்கூட்டத்திலும் சமூகமாயிருந்து வாக்களித்த உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு வாக்குகளினாலும், உறுப்பினரைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை விலக்குதல் என்பவற்றுக்காகவும், கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுக்குழு பல்வேறு அலுவலர், முகவர், சேவையாளர் என்போரினது கடமைகள் புரியப்படுவதற்காகவும், வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களிலும் வேறு வகையில் பொதுவாகவும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைக்காகவும், கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்காகவும், அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காகவும், காலத்துக்குக் காலம் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இயைபாயிராத அத்தகைய விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதியெதுவும் அல்லது இதன் பின்னர் நிறைவேற்றப்படும் விதியெதுவும் அதே போன்றதொரு கூட்டத்திலும், அதே முறையிலும் சமூகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்கு வாக்குகளினால் தவிர மாற்றப்படுதலோ அவற்றுக்கெதுவும் சேர்க்கப்படுதலோ திருத்தப்படுதலோ அல்லது இல்லாதொழிக்கப்படுதலோ ஆகாது.

ஆயின் எவ்வாறாயினும் அத்தகைய மாற்றம், சேர்த்தல், திருத்தம், அல்லது இல்லாதொழிப்பு எதுவும் கூட்டுத்தாபனத்தின் பிரதான பொதுமக்கள் போஷகரால் அங்கீகரிக்கப்பட்டாலொழிய பயனுடைய தாதலாகாது.

(3) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று வலு விலிருக்கும் கழக விதிகள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதன வையாகவிராத வரையில் இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாப னத்தின் விதிகள் எனக் கருதப்படுதல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் எல்லா உறுப்பினர்களும் கூட்டுத்தாபனத் தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

**கூட்டுத் தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனங்களை வைத் திருக்கலாம்.**

6. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை இறுதி விருப்பாவணக்கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள, அசை வற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும், வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாதலும் ஆற்றலுடையதாதலும் வேண்டுமென்பதுடன் அத் தகைய எல்லா ஆதனங்களும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்கவுள்ள முழுத் தத்துவத்துடன் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் கூட்டுத் தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும் கூட் டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

**கூட்டுத்தாபனத் தின் பொதுத் தத்துவங்கள்.**

7. (1) இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின தும் ஏற்பாடுகளுக்கு அமையக் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனும் ஒன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன் னேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத் தகையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும், காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாய் இருத்தல் வேண்டும். இத்தத்து வங்களுள் வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும் நடாத்தவும் முடிவுறுத் தவும் பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றிப் பணங் களைக் கடனெடுக்கவும் அல்லது திரட்டவும் அளிப்புக்களையும் கொடை களையும் பெறவும் அல்லது சேகரிக்கவும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அலுவலர்களையும் சேவையாளர்களையும் வேலையிலீடுபடுத்தல், வேலைநீக்கஞ் செய்தல் ஆகிய வற்றுக்கான தத்துவங்களும் அடங்கும்.

(2) 6 ஆம் பிரிவினாலும் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினாலும் கூட் டுத்தாபனத்திற்கு அளிக்கப்பட்ட தத்துவங்கள் இட்சைபெறாத பிரதான போஷகரின் அங்கீகாரத்துடன் நிறைவேற்றுக் குழுவால் பிரயோகிக்கப் படல் வேண்டும்.

கழகத்திற்கு செலுத்தப்படற்பாலனவும் கழகத்தினூற் செலுத்தற்படற்பாலனவுமான தனிசுகள்.

8. இச் சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று கழகத்திற்குள்ள எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அந்நாளன்று கழகத்திற்கு வருமதியான எல்லாத் தனிசுகளும் கழகத்திற்குச் செலுத்தப்படற்பாலதான ஒப்பப்பணங்களும் உதவு தொகைகளும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

9. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது இரண்டு நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் முன்னிலையில் அன்றி எத்தன்மைத்தான எந்தச் சாதனத்திலும் இடப்படலாகாது. அவர்களிருவரும் தாம் சமுகமளித்தமைக்கு அடையாளமாக அச்சாதனத்தில் பெயர்களை எழுதிக் கையொப்பமிடல் வேண்டும். அத்தகைய கையொப்பமிடல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதற்குப் புறம்பானதாய் இருத்தல் வேண்டும்.

குடியரசினதும் ஏனையோர்களினதும் உரிமைகளைப்பேணுதல்.

10. இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் குடியரசினது உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்கள் மூலம் அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருபவர்களும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துவதாதலோ பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

11. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா. (உள்நாட்டு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*